சார்பு நீதிமன்றம், ஓமலூர்
SC.No.105/2023

நாள்.25.08.2025

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 25.08.2025 ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.10 | ஜாதி | :----------- |
| பெயர் | தொல்காப்பியன் | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(All Accused present)**

முதல் விசாரணை**:-**

1. நான் தற்போது கொளத்தூர் காவல் நிலைத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.07.2022 ம் தேதியன்று மதியம் சுமார் 2 மணிக்கு தாரமங்கலம் காவல் உதவி ஆய்வாளர் திரு.அங்கமுத்து நிலைய அலுவலில் இருந்தபோது வாதி கார்த்திக் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரைப் பெற்று நிலைய குற்ற எண் 359/2022 சட்டப்பிரிவுகள் 395 இதச பிரிவாக வழக்கு பதிவு செய்தும், அசல் முதல் தகவல் அறிக்கை வாதியின் புகார் ஆகியவைகளை கனம் ஓமலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை எனது புலன் விசாரணைக்கு வைத்தாதைப் பெற்று,

2. அன்றே 14.07.2022 மதியம் 15 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பாஸ்கர் மற்றும் மாரிமுத்து ஆகியோர்கள் அடையாளம் காட்ட அவர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அதில் மேற்படி சாட்சிகளிடம் கையெப்பம் பெற்றேன்.

அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. அத்துடன் மேற்படி சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் புகார்தாரர் கார்த்திக், சாட்சிகள் ரமேஷ், சதீஷ்குமார், சரவணன், ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து அவரது வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

4. சாட்சிகளை விசாரணை செய்ததிலும் என்னுடைய புலன் விசாரணையில் சம்பவம் நடந்தது உண்மையென தெரியவந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் தகவலாளி மூலம் கிடைத்த தகவலின் அடிப்படையில் அன்றைய தேதியிலேயே மாலை 5 மணிக்கு அழகுசமுத்திரம் பேருந்து நிறுத்தம் அருகே எதிரி சதீஷ்குமார் மற்றும் அவருடன் இருந்த இளவர் கௌதம் ஆகியோர்களை கைது செய்து, பின்னர் இளவர் கௌதம் அவர்களை தனிமைப்படுத்தி நிலையத்திற்கு அனுப்பி வைத்தும், எதிரி சதீஷ்குமாரை தகவல் சொல்லி வரவழைக்கப்பட்ட சாட்சிகள் கார்த்திக், செங்கோட்டையன் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரிக்க எதிரி தானாக முன்வந்து தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், எதிரி மற்றும் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

5. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் அப்போது அவர் பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் படுத்திய அறுந்த நிலையில் இருந்த சுமார் 8 கிராம் எடையுள்ள தங்க செயினை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகைப்படத்தில் உள்ள செயின் தான் அன்று நான் கைப்பற்றிய செயின் ஆகும். புகைப்படத்தில் கண்ட மேற்படி தங்க செயின் **ச.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகைப்படம் (சி.டி-யுடன் கூடியது.) **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. பின்னர் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் ஆஜராகி அடைப்பு காவல் அறிக்கை தயார் செய்தும், படிவம் 95ம் தயார் செய்தேன். பின்னர் எதிரிகளை பாரா காவல் வசம் ஒப்படைத்து நீதித்துறை நடுவர் முன் ஆஜர்படுத்தி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இளவர் கௌதம் அவர்களை இளையநல நீதிமன்ற குழுமத்திற்கு முன்பு ஆஜர்படுத்தி கூர்நோக்கு இல்லத்திற்கு அனுப்பிவைத்தேன்.

7. வழக்கு சொத்தை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 95 **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் தகவலாளி கூறிய தகவலின் அடிப்படையில் தலைமறைவாக இருந்த எதிரிகள் குமார் என்கிற தியாகராஜன் மற்றும் சுரேஷ் ஆகியோர்களை காரணம் கூறி வழக்கு நிமிர்த்தம் கைது செய்தும், சாட்சிகள் முருகேசன் மற்றும் சுப்புரு ஆகியோர் முன்னிலையில் எதிரி சுரேஷ் என்பவரை விசாரிக்க அவர் தானாக முன் வந்து தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடமும், எதிரி சதீஷ் என்பவரிடமும் கையொப்பம் பெற்றேன்.

8. பின்னர் மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை நிலையம் அழைத்து வந்து அடைப்பு காவல் அறிக்கை தயார் செய்து கனம் ஓமலூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பு ஆஜர்படுத்தி நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் அங்கமுத்து அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் எதிரி ரஞ்சித் தலைமறைவாக இருந்ததால் சட்ட கருத்துரைப் பெற்றும் எதிரிகள் மீது அவரை தலைமறைவான எதிரியாக பாவித்து இதச பிரிவு 395ன் கீழ் இறுதி அறிக்கை கனம் ஓமலூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். நான் விசாரித்த போது சாட்சிகள் அனைவரும் கு.வி.மு.ச 163(1) உள்ளபடிதான் என்னிடம் வாக்குமூலம் சொன்னார்கள்.

**<u>1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

9. வழக்கு கோப்பு எனது புலன் விசாரணைக்காக எப்போது ஒப்படைக்கப்பட்டது என்றால் 14.07.2022ம் தேதி மதியம் சுமார் 2.30 மணிக்கு ஒப்படைக்கப்பட்டது. என்னிடம் ஒப்படைக்கப்பட்டபோது என்னென்ன ஆவணங்கள் வைத்து ஒப்படைக்கப்பட்டது என்றால் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலத்தின் நகல் ஆகியவைகள் வைத்து ஒப்படைக்கப்பட்டது. என்னிடம் வழக்கு கோப்பை ஒப்படைக்கும் போது அசல் புகார் எங்கிருந்தது என்றால் ஓமலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக சொன்னார்.

10. சம்பவத்தன்று கைது செய்த எதிரி சதீஷ்குமார் என்பவரை எத்தனை மணிக்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றால் 14.07.2022ம் தேதி இரவு சுமார் 9.30 மணிக்கு மேல் அனுப்பிவைத்தேன். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை 15.07.2022ம் தேதி 12.10 P.Mக்கு தான் பெறப்பட்டிருக்கிறது என்றால் முதல் தகவல் அறிக்கையில் அவ்வாறு தான் காணப்படுகிறது. நீதிமன்றத்தால் பெறப்படும் வரை அசல் முதல் தகவல் அறிக்கை யார் வசம் இருந்தது என்றால் நீதிமன்ற காவலர் வசம் இருந்திருக்கும். எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைக்கும்போது அதனுடனும் ஒரு நகல் முதல் தகவல் அறிக்கை வைத்துதான் அனுப்பியிருப்பேன்.

11. இந்த வழக்கில் அடைப்பு காவல் அறிக்கையிலும் கூட எதிரி சதீஷ்குமார் 15.07.2022ம் தேதி மதியம் 12.15 மணிக்கு தன்முன் ஆஜர்படுத்தப்பட்டதாக அடைப்பு காவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையில் முதல் தகவல் அறிக்கை அதற்கு 5 நிமிடத்திற்கு முன்னர் தான் நீதித்துறை நடுவர் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், நான் வழக்கிற்காக அப்போதே நீதிமன்றத்திற்கு கொடுத்து அனுப்பியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

12. முதல் தகவல் அறிக்கை பெற்றவுடன் சம்பவயிடத்திற்கு தான் சென்றேன் என்றால் ஆமாம். பார்வை மகசரில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் அன்று பணியில்

இருந்த எழுத்தர் எழுதியிருப்பார். எழுதிய எழுத்தர் அதில் கையெப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்ல சொல்ல தான் அவர் எழுதினார். எனது புலன் விசாரணை அறிக்கையில் பார்வை மகசரை வட்ட எழுத்தர் எழுதினார் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

13. நான் சொல்ல சொல்ல தான் வட்ட எழுத்தர் பார்வை மகசரை எழுதினார் என்றால் ஆமாம். அந்த பார்வை மகசரில் இந்த பார்வை மகசர் தாரமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.395/2022 க்கானது என்று எழுதப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். அது கையெழுத்து பிழையாகும். இந்த வழக்கின் குற்ற எண்.359/2022 என்றால் ஆமாம். மாதிரி வரைபடத்தையும் வட்ட எழுத்தர் தான் வரைந்தாரா என்றால் ஆமாம். என் முன்னிலையில் நான் சொல்ல சொல்ல அவர் வரைந்தார்.

14. மாதிரி வரைபடத்தில் பிரதான சாலையில் இருந்து பச்சக்காட்டிற்கு செல்லும் மண் பாதையில் எவ்வளவு தூரம் தள்ளி சம்பவயிடம் குறிப்பிட்டு காட்டப்பட்டிருக்கிறது என்றால் சுமார் 75 ல் இருந்து 100 அடி இருக்கும். சம்பவயிடம் உள்ள மண் பாதையில் இருபுறமும் கடைகள், வீடுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் வைத்து எந்த பொருட்களும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவம் இந்த இடத்தில் தான் நடைபெற்றது என்று புகார் கொடுத்தவர் என்னோடு வந்து அடையாளம் காட்டினாரா என்றால் ஆமாம். சாட்சிகளும் அடையாளம் காட்டினார்கள்.

15. பார்வை மகசரில் புகார் கொடுத்த நபர் சம்பவயிடம் வந்து அடையாளம் காட்டியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், புகார்தாரரிடம் கையொப்பமும் பெறவில்லை என்றாலும் சரிதான். சம்பவயிடத்தில் இருந்து அம்மன் திரையரங்கம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றால் சுமார் 150 ல் இருந்து 200 அடி தூரத்தில் இருக்கும். எனது வரைபடத்தில் அம்மன் திரையரங்கத்தை காட்டவில்லை என்றால் சரிதான். பார்வை மகசரில் அம்மன் திரையரங்கத்திற்கு எதிரே பச்சை காட்டிற்கு சொல்லும் மண் பாதை என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம்.

16. எனது வரைபடத்தில் பச்சை காட்டிற்கு செல்லும் மண் பாதைக்கு எதிர்புறமாக சிவசக்தி சிக்கன் கடை, தங்கராஜ் காலி நிலம், ஆகியவைகளைதான் குறிப்பிட்டு காட்டியிருக்கிறேன் என்றால் ஆமாம். பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவைகளை காவல் நிலையத்தில் இருந்துகொண்டே தயார் செய்ததால் தான் உரிய விவரங்களை அதில் எழுதவில்லை என்றால் சரியல்ல. எதிரி சதீஷ்குமார் என்பவரை கைது செய்து அவரிடம் இருந்து நகை கைப்பற்றியதாக நான் சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவரிடமிருந்து கைப்பற்றிய நகையை அதே இடத்தில் வைத்து எடை போட்டு பார்த்தேனா என்றால் இல்லை பின்னர் தான் பார்த்தேன்.

17. கைப்பற்றிய போது நகையில் கடையின் எதாவதுடைய முத்திரை வைக்கப்பட்டிருந்ததா என்றால் எனக்கு நினைவில்லை. நான் கைப்பற்றுதல் மகசரில் அதுப்பற்றி குறிப்பிடவில்லை. புகார்தாரர் புகார் கொடுத்தபோது நகையின் இரசீது, செல்போனின் ரசீது ஆகியவைகளை என்னிடம் கொடுத்தாரா என்றால் இல்லை. ஆனால் எதிரிகளை கைது செய்தபோது நகையை கைப்பற்றி பின்னர் அந்த நகையை புகார்தாரர் அடையாளம் காட்டினார்.

18. நகையை அடையாளம் காட்டவந்தபோதும் கூட நகையின் இரசீது எதையும் எடுத்துவரவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை எங்கு வைத்து கைப்பற்றினேன் என்றால் அம்மன் தியேட்டர் பஸ் ஸ்டாப் அருகே வைத்து கைப்பற்றினேன். வழக்கு சொத்தை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசர் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் நிலையம் வந்து கணினியில் தயார் செய்து அதே சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கப்பட்டது.

19. வழக்கு சொத்தை கைப்பற்றிய பின்னர் நிலையம் வந்துதான் கைப்பற்றுதல் மகசர் தயாரிக்கப்பட்டதா என்றால் ஆமாம். எதிரிகளை நிலையம் அழைத்துவந்து தான் கைப்பற்றினோம் அதே சாட்சிகள் முன்னிலையில் தான் கைப்பற்றினோம். வழக்கு சொத்தை எதிரிகளை அடைப்பு காவலுக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பிய போது

நீதிமன்றத்திற்கு அனுப்பாததால் தான் படிவம் 95 திருப்பப்பட்டிருக்கிறது என்றால் நினைவில்லை.

20. வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்போது எடை சீட்டோடு ஆஜர்படுத்தவில்லை என்றால் ஆமாம். பின்னர் எடை சீட்டோடு தான் வழக்கு சொத்தின் எண் கொடுக்கப்பட்டது. நான் சொல்வது போல் எதிரியை கைது செய்து வழக்கு சொத்தை கைப்பற்றவில்லை என்றாலும், வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. எனது புலன் விசாரணையில் செல்போன் கடை வைத்திருக்கும் சந்தியா என்ற நபரோடு புகார் கொடுத்தவருக்கு பழக்கம் ஏற்பட்டதால் தான் பிரச்சனை ஆரபித்தது என்று தெரியவந்தது என்றால் ஆமாம்.

21. சந்தியா என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். புகாரில் சம்பவம் நடைபெறுவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் சுரேஷ் என்பவர் அவருடைய நண்பர்களை அழைத்துவந்து அ.சா.1 யை அடித்துவிட்டதாக குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார் என்றால் ஆமாம். இது சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு புகார்எதுவும் வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார்தாரரின் செல்போன் பிடுங்கிவிட்டதாக புகார் கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்தசெல்போனை நான் கைப்பற்றவில்லை என்றால் கைப்பற்ற முயற்சித்தேன் அந்த செல்போனை உடைத்து தூக்கி எறிந்துவிட்டதாக சுரேஷ் என்கிற யுவராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியதால் கைப்பற்ற இயலவில்லை.

22. பிடுங்கி கொண்ட செல்போனில் என்ன சிம், என்ன தொலைப்பேசி எண் பயன்படுத்தப்பட்டது என்பது குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தொலைப்பேசி எண் சொல்லவில்லை. செல் மாடல் மட்டும் தான் சொல்லியுள்ளார். எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் செல் உடைத்ததாக சொல்லப்பட்டிருக்கும் நிலையில் சம்பவத்திற்கு பின்னர் எவ்வளவு நாட்கள் கழித்து எதிரி சுரேஷ் என்ற யுவராஷ் என்பவரை கைது செய்தேன் என்றால் 16.08.2022ம் தேதி கைது செய்தேன். ஒரு மாததிற்கு பின்னர் தான் கைது செய்தேன் என்றால் ஆமாம்.

23. புகார் கொடுத்த நபரின் செல்போன் எண்ணை பெற்று அவர் பேசிய தொலைப்பேசி எண்களுக்கான டவர் Location ஐ பெறவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற போது புகார்தாரர் யாரிடமோ போன் பேசிக்கொண்டிருந்ததாக தான் புகாரில் சொல்லப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். புகார்தாரர் அந்த சமயத்தில் யாரிடம் போன் பேசிக்கொண்டிருந்தார் என்பது குறித்து விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் சமயத்தில் அங்கு யாரும் இல்லை என்று புகார்தாரர் கொடுத்த புகாரில் சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். சம்பவம் நடந்த பின்னர் சத்தம் கேட்டு வந்ததாக சொல்லியிருக்கிறார்.

24. எதிரிகள் எந்த வாகனத்தில் எத்தனை பேர் வந்தார்கள் என்பது குறித்து புகாரில் விளக்கம் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஓடிபோய்விட்டார் என்பதுமட்டும்தான் இருக்கிறது. புகார் சம்பவத்திற்கு மறுநாள் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். ஏன் புகார் உடனடியாக கொடுக்கப்படவில்லை என்பதற்கான விளக்கம் முதல் தகவல் அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். புகாரிலும் அதுகுறித்து சொல்லவில்லை என்றால் ஆமாம்.

25. காவல் நிலையத்தில் வைத்து கலந்து ஆலோசித்து நான் தான் அ.சா.1 னிடம் வெற்றுதாளில் கையெப்பம் பெற்று புகாரை எழுதி கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் காலதாமதத்திற்கான விவரம் புகாரில் இல்லை என்றால் சரியல்ல. சம்பவத்தில் புகார்தாரருக்கு காயம் எதுவும் இல்லை என்றாலும், அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை என்றாலும் சரிதான். புகார்தாரரின்வீடு சம்பவயிடத்திற்கு அருகே இல்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் இருந்து சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்தில் தான் புகார்தாரர் வீடு இருக்கும் என்றால் இல்லை சுமார் 4 ல் இருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும்.

26. சம்பவம் தேதியில் சம்பவ நேரத்தில் புகார்தாரர் சம்பவயிடத்திற்கு எதற்காக வந்தார் என்பதற்கான விளக்கம் புகாரில் இல்லை என்றால் சரியல்ல. அந்த இடத்தின் வழியாகதான் அவர் வீட்டிற்கு செல்லவேண்டும். எதிரிகளாக இந்த வழக்கில் நான்

குறிப்பிட்டிருக்கும் நபர்கள் சந்தியா என்பவரின் கடைக்கு சென்று செல்போன் Recharge செய்வது வழக்கம் என்றாலும், அவ்வாறு செல்லக்கூடாது என்று புகார்தாரர் சந்தியாவுடன் பழகிவந்த காரணத்தால் ஆஜர் எதிரிகளை தடுத்தார் என்றாலும், அதனால் தான் எந்த சம்பவம் நடக்காமல் இவ்வாறு எதிரிகள் மீது அசா.1 பொய்யாக புகார் கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல.

27. இந்த வழக்கின் இறுதி அறிக்கை 4 எதிரிகள் மீது மட்டும் தான் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் இந்த எதிரிகள் மீது 4 எதிரிகள் மீதும் இளையநல குழுமத்தில் ஒரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இளவர் மீது இறுதி அறிக்கை இந்த இறுதி அறிக்கை தயார் செய்த தேதியிலேயே தயார் செய்தேனா என்றால் நினைவில்லை. எதிரிகள் மீது ஒரே குற்றச்சாட்டிற்கு தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆமாம்.

28. இளவர் மீது இந்த எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தயார் செய்த தினத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனவே ஒரே நேரத்தில் 5 நபர்கள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யாத காரணத்தால் இதுசட்டப்படி செல்லதக்க இறுதி அறிக்கை என்றால் சரியல்ல. இதச பிரிவு 395 ன் கீழ் 4 எதிரிகள் மீது மட்டும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய இயலாது என்றால் ஆமாம். 5 எதிரிகள் மீது தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்கிறேன். புகாரில் கண்டதுபோல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து எதிரிகள் மீது பொய்யான இறுதி அறிக்கை தயார்செய்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1 மற்றும் 3 எதிரிகளுக்கும் இந்த குற்றச்சாட்டிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1 மற்றும் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தனதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/-T.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.